**Copy of Deposition**

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.

அசல் வழக்கு எண். 107/2024

பெயர்:–சாரதாம்பாள் நாள்:10.04.2026

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின்பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–(வாதி தரப்பில்)

இந்த வழக்கு கால தாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது நான் கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல. எனக்கு தேதி எதுவும் ஞாபகம் இருக்காது என்றால் ஒப்பந்தம் எழுதியது 08.09.2016. எத்தனை நாட்கள் கெடு வைத்து போடப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. 7 மாதங்கள் தவணை கேட்டார்கள். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ளது எனது கையொப்பமா என்றால் நான் ஸ்டாம்ப் மீது கையொப்பம் போடவில்லை. நான் வழக்கிற்காக வா.த.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.4 இரசீதை நீதிமன்றத்தில் மனு செய்து பார்வையிடவில்லை என்றால் சரிதான். வா.த.சா.ஆ.4 ஆவணத்தை பார்வையிடாமல் கையொப்பம் என்னுடையது அல்ல என்று கூறுவதில் இருந்தே அந்த கையொப்பம் என்னுடையதுதான் என்று தெரிய வருகிறது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே வழக்கறிஞர் அறிவிப்பு வந்ததா என்றால் வரவில்லை. வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டு விட்டு தற்போது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.4 ஆவணத்தில் மேற்படி மூல ஆவணம் கிடைக்கப்பெற்றவுடன் தங்களுக்கோ தங்களது வழக்கறிஞருக்கோ தெரிவித்த தேதியில் இருந்து 30 நாட்களுக்குள் கிரையம் செய்து கொடுக்கிறேன் என்று கால நீட்டிப்பு செய்து கொடுத்தேன் என்றால் இல்லை. அந்த பூமி sight ஆக மாற்றுவதற்காக நிரவப்பட்டுள்ளதா என்றால் சரிதான். எங்களை சுத்தம் செய்ய விடவில்லை. பதிவு செய்யப்படாத கிரைய உடன்படிக்கையில் உள்ள கையொப்பங்கள் பாதுகாப்பிற்காக வாதிகள் போட்டு கொடுத்ததுதான் ஒழிய அந்த உடன்படிக்கையில் உள்ள வாசகங்கள்

**Copy of Deposition**

வாதிகளுக்கு தெரியாமலேயே நாங்கள் தயார் செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தை ரூ.6,00,000/- விற்பதாக வா.த.சா.ஆ.4 ஆவணத்தில் ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு தடம் இல்லாததால் அதன் மதிப்பு ரூ.6,00,000/-என்பதே அதிகம் என்றால் சரியல்ல. ரூ.90,00,000/-ற்கு உடன்படிக்கை போட்டது பூமிக்கும், அதன் மதிப்பிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து ரூ.90,00,000/- மதிப்புடையது என்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் என்னிடம் பத்திரம் உள்ளது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அரசாங்க வழிகாட்டி மதிப்பு என்னவென்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 நான் போடவில்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்து விவரத்தின் கடைசியில் இந்த சொத்தின் தற்கால மார்க்கெட் மதிப்பு ரூ.6,00,000/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள கிரைய உடன்படிக்கை பத்திரத்தில் சொத்தின் மதிப்பு ரூ.6,00,000/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் வழக்கிற்காக சொத்தின் மதிப்பு ரூ.90,00,000/- என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. ஒரு பதிவு செய்யப்பட்ட கிரைய உடன்படிக்கைக்கு மாறுதலாக வாய்மொழி உடன்படிக்கையோ அல்லது பதிவு செய்யப்படாத உடன்படிக்கை செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பதிவு செய்யப்படாத உடன்படிக்கை நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எங்களது வசதிக்காக போலியாக தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவாப்படி பிரதான கோரிக்கை தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை:- இல்லை

| |
|---|
| Taken down by me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2026.04.10 14:44:38 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |